இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவ கற்கைகள் துறை

# ESBM

## தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும்

## சான்றிதழ் கற்கை நெறி 2018

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார**
**முகாமைத்துவமும் சான்றிதழ்க் கற்கை நெறி**
**கல்வியாண்டு 2018**

இக் கைநூல் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் துறையினால் 2018 ம்கற்கை வருடத்திற்காக வழங்கப்படும் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய விரிவான விபரங்களைத் தருகின்றது.

இக் கைநூலின் தெளிவுத்தன்மையை நிட்சயப்படுத்த சகல முயற்சிகளும் எடுக்கப்படும் அதே வேளை, இக் கைநூலின் உள்ளடக்கம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முழுமையான ஒழுங்கு விதியில் அல்லது கொள்கையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப இடம் பெறும் மாற்றம் அல்லது திருத்தத்திற்கு உள்ளாகலாம்.

நாவல,
நுகேகொட.
ஆகஸ்ட் 2017

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | துறைத் தலைவரின் வாழ்த்துரை | 03 |
| 2. | பல்கலைக்கழகம் | 04 |
| 3. | கற்கைத் துறை | 05 |
| 4. | தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் | 06 |
| 5. | மேலதிகத் தகவல்கள் | 10 |
| 6. | தொடர்பு கொள்ளும் தகவல்கள் | 21 |
| | பின்னிணைப்புக்கள் | 22 |

**துறைத் தலைவரின் வாழ்த்துரை**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் துறையினால் வழங்கப்படும் தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் (ESBM) சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாணவர்களை உள்வாங்கும் இச்சந்தர்ப்பத்தில் இவ்வாழ்த்துரையை மிகவும் மகிழ்ச்சியுடன் வழங்குகின்றேன்.

தொழிலுரிமைத்துவ வியாபாரத் துறையின் முன்னேற்றங்களும், மேம்பாடுகளும் வளர்ச்சியடையும் நாட்டிற்கு முக்கியமானவைகளாகும். மூன்றாம் உலக அபிவிருத்தியடையும் நாடான இலங்கை, தேசிய பொருளாதாரத்திற்கு தொழிலுரிமையாளர்களின் பங்களிப்பை மேம்படுத்த பாரிய முயற்சிகளை எடுத்துள்ளது.ஆரோக்கியமான வியாபார சுற்றாடலுக்கு மத்தியிலும், அதிகமான சிறிய, நடுத்தர தொழிலுரிமையாளர்களுக்கு, தமது வியாபாரத்தை செயற்றிறனுடனும், திறனாற்றலுடனும் முகாமை செய்வதற்கான போதிய அறிவின்மையால், அவர்கள் தோல்வியடைந்தும், மந்தகரமான வளர்ச்சியினால் பாதிக்கப்பட்டும், சில வேளைகளில் தம் தொழிலிருந்து நீங்கும் நிலையையும் அடைகின்றார்கள். உலக போக்கையும், உயர் அறிவுடைய தொழில்சார் தொழிலுரிமையாளர்களை உருவாக்கும் கல்வி முறைமையின் முக்கியத்துவத்தையும் ஏற்று, முகாமைத்துவ கற்கைகள் துறை, ஒரு வருட கால தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் எனும் சான்றிதழ் பாடநெறியை அறிமுகம் செய்துள்ளது.

இந் நிகழ்ச்சித் திட்டத்தினால், தொழிலுரிமையாளருக்குத் தேவையான அத்தியாவசிய அறிவை நீங்கள் அடையும் வேளையில், உங்களின் சொந்த நடையில் கற்பதைத் திட்டமிடவும், திறந்த, தொலைக் கல்வியின் அனுபவத்தை பெறவும் இந் நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எங்களுடன் செலவிடப்படும் உங்களின் நேரம், முயற்சி ஆகியவற்றை வெகுமதி மிக்கதாகவும், நினைவில் நிலைநிறுத்தவும் இந் நிறுவனத்தைச் சேர்ந்த நாம் எம்மாலான தேவையான சகல ஆதரவையும் வழங்கவுள்ளோம்.

வெற்றிகரமான தொழிலுரிமையாளராகவும், தேசத்திற்கு பெறுமதி மிக்கவராகவும் திகழ நீங்கள் முன்வருவதைக் காண்பதே எனது அதீத விருப்பமாகும். உங்களின் இப்பெறுமதியான கற்கை முயற்சிகளின் வெற்றிக்காக வாழ்த்துகின்றேன்.

கலாநிதி. வ.சிவலோகதாசன்
தலைவர்– முகாமைத்துவ கற்கைகள் துறை
மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**பல்கலைக்கழகம்**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் 1978 ஆம் ஆண்டு பல்கலைக்கழகச் சட்ட இலக்கம் 16 இன்படி, வளர்ந்தோர் திறந்த தொலைக்கல்வி ஊடாக வாழ்நாளுக்கான கற்றலுககும், ஆய்வு மற்றும் கல்விப் புலமையில் திறமையடைவதற்கு ஆதரவளித்தலுக்குமான வாய்ப்புக்களை மேம்படுத்தும் நோக்குடன் நிறுவப்பட்டது. இது இலங்கையில் உள்ள ஏனைய தேசியப் பல்கலைக்கழகங்களுக்கு இணையான சட்ட, கல்விசார் அந்தஸ்த்தைக் கொண்டுள்ளது. மாணவர் தமது மேலதிகக் கல்வியைப் திறந்த தொலைக்கல்வி நுட்பத்தின் (ODL) ஊடாக பெற இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு பல்கலைக்கழகம் இதுவாகும்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் நோக்கில் குறிப்பிட்டவாறு, இதன் கற்கை நெறிகள்,பிரதானமாக தொழில் புரிவோரையும், வளர்ந்தோரையும் இலக்காகக் கொண்டிருப்பதுடன், அவர்களை சுயமாகக் கற்கவும் வைக்கின்றது. இப் பல்கலைக்கழகம் அடிப்படை நிகழ்ச்சித் திட்டம், சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம்,டிப்ளோமாக்கள், இளமாணி பட்டம், முதுமாணி பட்டங்கள், கலாநிதி முதுமாணி கலாநிதி ஆகிய கற்கை நெறிகளையும், தொடருறு கல்வி நிகழ்ச்சித் திட்டங்களையும் வழங்குகின்றது.

இப் பல்கலைக்கழகம் தற்பொழுது மானிடவியல் சமூக விஞ்ஞான பீடம், இயற்கை விஞ்ஞான பீடம், பொறியியல் தொழில் நுட்ப பீடம், கல்விப் பீடம் மற்றும் சுகாதார அறிவியல் பீடம் ஆகிய ஐந்து பீடங்கள் ஊடாக 35,000 க்கு மேலான மாணவர்களுக்கு கல்வியூட்டுகின்றது. நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள பிராந்திய நிலையங்கள், கற்கை நிலையங்கள் ஆகியவற்றைக் கொண்ட வலைப்பின்னல், கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கவும்,மாணவர்கள் தமது கல்விசார் நடவடிக்கைகளை மேற்கொள்வதை இலகுவாக்கவும் வசதியளிக்கின்றது.

**கற்கை துறை**
**முகாமைத்துவகற்கைத் துறை**

மானிடவியல், சமூக விஞ்ஞான பீடத்துடன் இணைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள் துறை (DMS),முகாமைத்துவ கல்வி, தேர்ச்சிகள்,தகுந்த முகாமைத்துவ நோக்குகள் ஆகியவற்றை வழங்கவும், அவைகளை விருத்தி செய்வதையும் நோக்காக் கொண்டு தனது கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை 1980 ல் ஆரம்பித்தது.

தற்பொழுது முகாமைத்துவ கற்கைகள் துறை (DMS)இச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து முதுமாணிப் பட்டங்கள் வரை பின்வரும் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துகின்றது.

- தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் (ESBM)
- முகாமைத்துவ டிப்ளோமா (DM)
- முகாமைத்துவ கற்கைகள் பட்டமாணி (BMS)
- பொதுநலவாய நிறைவேற்று வணிக நிர்வாக முதுமாணியும் (CEMBA), பொதுநலவாய நிறைவேற்று பொது நிர்வாக முதுமாணியும் (CEMPA)
- மனிதவள முகாமைத்துவத்தில் வணிக நிர்வாக முதுமாணி (MBA in HRM)

**தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம்**

தொழிலுரிமைத்துவ வியாபாரத் துறையில் ஏற்படும் முன்னேற்றங்களும்,மேம்பாடுகளும் நாட்டின் வளர்ச்சிற்கு திடமூட்டுகின்றன. இலங்கையில் உள்ள அதிகமான வியாபார முயற்சிகள் சிறிய, நடுத்தர வியாபார வகையைச் சார்ந்தவையாகவிருப்பதால், அரசாங்கம் இவ் வியாபாரங்களின் செயற்றிறனை தரமுயர்த்தி மேம்படுத்த பல முயற்சிகளை எடுத்துள்ளது. இம் முயற்சிகளுக்கு மத்தியிலும், நாட்டில் நிலவும் ஆரோக்கிய சூழலிலும், அதிகமான வியாபாரங்களை செயற்றிறனுடனும், திறனாற்றலுடனும் முகாமை செய்வதற்கான போதிய அறிவின்மையால் அவைகள் செயற்றிறனற்ற நிலையின் கீழ் செயலாற்றுகின்றன. தற்போதுள்ள கல்வி தளத்திலுள்ள இடைவெளியை நிவிர்த்தி செய்யும் பொருட்டு, முகாமைத்துவ கற்கைகள் துறை நாடுமுழுவதிலுமுள்ள நடைமுறையிலுள்ள மற்றும் ஆற்றலுள்ள சிறிய தொழில்முயற்சியாளர்களை இலக்காகக் கொண்டு தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

**நிகழ்ச்சித் திட்டத்தின்நோக்கங்கள்**

- தேசிய பொருளாதாரத்தில் தீவிரமாகச் ஈடுபடும் வலுவான தொழிலுரிமைத்துவ வியாபார முன்னனியை விருத்தி செய்வதற்கு பங்களிப்பதே இந் நிகழ்சித் திட்டத்தின் பிரதான நோக்காகும்.
- குறிப்பிட்ட நோக்கங்கள் உள்ளடக்குபன;
    - வெற்றிகரமான தொழிலுரிமையாளராகவதற்குத் தேவையான அத்தியாவசிய அறிவு, தேர்ச்சிகளை பங்குபற்றுவோர்களிடையே பெற்றுக் கொள்ளல்.
    - தொழிலுரிமைத்துவ நியமம், ஊக்கப்படுத்தல் ஆகியவற்றை விருத்தி செய்தலும்,வலுவாக்குதலும்.
    - கல்வி கற்ற இளைஞர்கள், பெண்களுக்கு பெறுமதியான சுய தொழிலை வழங்கல்.
    - துரித கைத்தொழில் அபிவிருத்திற்காக தொழிலுரிமையாளர்களின் விநியோகத்தை விரிவுபடுத்தல்.

**கற்கை நெறிக் காலம்:**
ஒருகல்வியாண்டு

**போதனா மொழி:**
தமிழ், சிங்களம்,ஆங்கிலம்.
விண்ணப்பதாரர் தெரிவு செய்த கல்வி பயிற்றும் மொழியில் சிறந்த ஆற்றலைப் பெற்றிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**அனுமதிக்கான தகைமைகள்:**

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.**அத்துடன்**
(அ) சமூக விஞ்ஞானங்கள் அடிப்படைக் கற்கை நெறி மட்டம் 1னை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
**அல்லது**

(ஆ) திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைக் கற்கை நெறியில் இரண்டு கணிப்பு விகிதத்தைக் அல்லது விலக்களிப்பைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(இ) க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் கணிதம், மொழி அடங்கலாக எவையேனும் ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ஈ) பல்கலைக்கழக அவையினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஏதாவது தகைமைகள்

**தேவைப்படின் அனுமதிக்கான பரீட்சையும் நடாத்தப்படலாம்.**

**கற்கை நெறியின் அமைப்பும் அணுகுமுறையும்**

இக்கற்கை நெறி **ஏழு (7)** பாடநெறிகளைக் கொண்டுள்ளது.

- MCC1201 - தொழிலுரிமைத்துவம்
- MCC 1202 - சிறிய வணிகமொன்றினை முகாமை செய்தல்
- MCC 1103 - அடிப்படைப் புள்ளிவிபரவியலும்,பொருளியலும்
- MCC 1204 - சந்தைப்படுத்தல் அறிமுகம்
- MCC 1105 - செயற்பாட்டு முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம்.
- MCC1206 - கணக்கியலும், நிதியியலும் அறிமுகம்
- MCC 1207 - திட்ட அறிக்கை

திட்ட அறிக்கை, பல்கலைக்கழக முகாமைத்துவக் கல்விப் பிரிவின் கல்விசார் அலுவலர்களின் துணையுடன் தயாரிக்கப்பட வேண்டும். இவ்வறிக்கை, ஒரு முறையான ரீதியில் ஒரு வியாபார முயற்சியினை மேற்கொள்ளல் பற்றியதாக அமைதல் வேண்டும். இத்திட்ட அறிக்கை, மதிப்பீட்டுக்கு எடுக்கப்படுவதுடன், இதற்குச் சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும்.

**மதிப்பீடு செய்யும் முறை:**

மாணவர் திறன் பின்வரும் மூன்று திறமைகளைக் கொண்டு தீர்மானிக்கப்படும்

- ஒப்படைகள்
- திட்ட அறிக்கை
- இறுதிப் பரீட்சை

**கற்கை நெறிக் கட்டணம்:**

நிகழ்ச்சித் திட்டத்தின் முழுக் கட்டணம் ரூபா. 19,500.00 ஆகும்.இக் கட்டணத்தை இரண்டு தவணைகள் அடிப்படையில் செலுத்தலாம்.

முதலாம் தவணைப் பணம்- ரூபா. 12 000.00

இரண்டாம் தவணைப் பணம்- ரூபா. 7 500.00

மொத்தம் ரூபா. 19 500.00

**சான்றிதழ் வழங்குதல்:**

- இறுதிப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு, இலங்கை திறந்த பல்கலைக்கழக விதிகளுக்கு அமைவாகபல்கலைக்கழகம் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவக் கற்கை நெறியில் சான்றிதலை வழங்கும்.
- இச் சான்றிதழ்க் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்,முகாமைத்துவ கற்கைகள் நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றாமல் முகாமைத்துவ கற்கைகள் பட்டமாணி நெறிக்குரிய அனுமதிக்கான தகுதியைப் பெற்றுக்கொள்வர்.

**மேலதிகத் தகவல்கள்**

**பாடநெறியும், கல்விதுறைசார் நிகழ்ச்சித் திட்டங்களும்**

- திறந்த பல்கலைக்கழகத்தின் சொற்தொகுதியின் படி,''பாடநெறி'' என்பது ஒரு கல்வியாண்டிற்குள் பூர்த்தி செய்யப்படும் கற்கையின் அடிப்படை கூறாகும்.

- கட்டாய பாடநெறிகளினதும், தெரிவு செய்யப்படும் பாடநெறிகளினதும் கூட்டிணைப்பே ''கற்கை நிகழ்ச்சி'' திட்டமாகும். கற்கை நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வது சான்றிதழ், டிப்ளோமா அல்லது பட்டமாணியொன்றை பெறுவதற்கு இட்டுச் செல்லும். மாணவரொருவர் குறிப்பிட்ட கற்கை நிகழ்ச்சித் திட்டத்தின் தேவைகளைப் நிறைவேற்ற ''கட்டாய பாடநெறிகளை'' பூர்த்தி செய்தல் வேண்டும்.

- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களின் வகைகள் பின்வருமாறு.
    - அடிப்படைக் கற்கை நெறி
    - சான்றிதழ் கற்கை நெறி
    - டிப்ளோமாக் கற்கை நெறி
    - பட்டமாணி கற்கை நெறி
    - பட்டப்பின்படிப்பு கற்கை நெறி
    - முதுமாணி கற்கை நெறி
    - முது தத்துவமாணி/கலைமாணி
    - தொடருறு கல்வி நிகழ்ச்சித்திட்டம்.

முகாமைத்துவ கற்கைகள் துறையின் கல்வித்துறைசார் உறுப்பினரொருவர் திட்ட அறிக்கையைத் தயார் செய்யும் போது மாணவருக்கு வழிகாட்டுவதுடன், இது மாணவரை வியாபார முயற்சியொன்றிக்கான முன்மொழிவைத் பாரம்பரிய முறையில்தயாரிக்க ஏதுவாக்கும். சான்றிதழ் வழங்குவதற்கு தகுதியைப் பெறுவதற்கு, உரிய நேரத்தில் திட்ட அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டப்படுகின்றது.

அடிப்படை நிகழ்ச்சித்திட்டங்கள் ஏனைய கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு திறவுகோலாகும்.

அவைகள் மட்டம் 1(F1), மட்டம் 2(F2) ஆகிய இரு மட்டங்களில்வழங்கப்படுகின்றது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அடிப்படைக் கற்கை நிகழ்ச்சித் திட்டத்தை பூர்த்தி செய்யும் போது குறித்த பாடப்பரப்பில் பெறும் அறிவு, மரபு ரீதியான பல்கலைக்கழகத்தில் அனுமதிக்காகக் காத்திருக்கும் மாணவர்களின் அறிவுக்குச் சமமானதாகும்.

- ஒவ்வொரு பாடநெறிக்கான பாடக் குறியீடும்,7 எண்களைக் கொண்டிருக்கும். எழுத்துக்களின் இயல்புகளும் பின்வருமாறு காணப்படும். (உதாரணமாக: MCC1201,MCC1202)

- முதல் இரு எழுத்துக்களும் கற்கை நெறிப் பாடப்பரப்பை சுட்டிக்காட்டுகின்றது (அட்டவணை 1ஐப் பார்க்கவும்)

- மூன்றாம் எழுத்தும் 1ஆம் எண்ணும் கற்கை நெறி மட்டத்தையும், வகையையும் சுட்டிக்காட்டுகின்றது - (அட்டவணை 2ஐப்பார்க்கவும்)

- 2ஆம் எண் கணிப்பு விகிதத்தைச் சுட்டிக்காட்டுகின்றது (அட்டவணை 3 ஐப் பார்க்கவும்)

- இறுதி இரு எண்கள் பாடநெறிக்கான தொடரிலக்கத்தைக் காட்டுகின்றது.

**அட்டவணை 1**

மானிடவியல் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தினால் நடத்தப்படும் கற்கை நெறிகள்

| **கற்கை நெறிகள்** | **குறியீட்டு எண்** |
|---|---|
| மொழிக் கற்கைகள் | LS |
| சட்ட கற்கைகள் | LW |
| முகாமைத்துவ கற்கைகள் | MC |
| சமூக விஞ்ஞான கற்கைகள் | SS |

**அட்டவணை 2**
கல்வி நிகழ்ச்சித் திட்டம்

| **பயிற்சி நெறி மட்டம்** | **அடிப்படைக் கற்கை நெறி** | **சான்றிதழ்** | **டிப்ளோமா** | **பட்டப்படிப்பு** | **பட்டப்பின் படிப்பு** | **தொடர்கல்விக் கற்கை நெறி** |
|---|---|---|---|---|---|---|
| 0 | | | | | | E0 |
| 1 | F1 | C0 | | | | E1 |
| 2 | F2 | C1 | | | | E2 |
| 3 | | C2 | D1 | U1 | | E3 |
| 4 | | | D2 | U2 | | E4 |
| 5 | | | | U3 | | E5 |
| 6 | | | | U4 | P1 | E6 |
| 7 | | | | | P2 | E7 |

**அட்டவணை 3**
கணிப்பு விகிதம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கணிப்பு விகிதம் | 1 | 2/3 | 1/2 | 1/3 | 1/6 | 0 |
| குறியீட்டின் இரண்டாம் இலக்கம் (5 ஆம் இயல்பு) | 6 | 4 | 3 | 2 | 1 | 0 |

## திறந்த பல்கலைக்கழகத்தின் கற்றல் - கற்பித்தல் முறை

திறந்த பல்கலைக்கழகம் தொலைக் கல்வியின் ஊடாக மாணவர்களுக்கு அறிவினை வழங்குகின்றது. போதனையாளருக்கும் மாணவர்களுக்கும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிராத வகையில் இம்முறை அமைந்துள்ளது. எனினும் அச்சிடப்பட்ட பாடநூல்களின் ஊடாகவும் கட்புல, செவிப்புல சாதனங்களின் ஊடாகவும், தேவைப்படுமிடத்து நேருக்கு நேரான வழிகாட்டல் மூலகமாகவும் தொடர்பு ஏற்படுத்தப்படுகின்றது. இம்முறையின் கீழ் தொடர் மதிப்பீடு மூலமாகவும் பரீட்சைகள் மூலமாகவும் மாணவர்களின் மதிப்பீடு நடைபெறுகின்றது.

- **அச்சிடப்பட்ட பாடநூல்கள்**

ஒவ்வொரு மாணவராலும் பெறப்படும் அச்சிடப்பட்ட பாடநூல்களேஇம்முறையின் அடிப்படையான மூலகமாகும். அவைகள் மாணவர்களுக்கு முதன்மை கற்கை நூல்களாகவிருப்பதுடன், நேரடி விரிவுரைகளுக்கு சமமானதாகும். அவைகள் அடிப்படைக் கோட்பாடுகள், வினாக்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருப்பதுடன், மாணவர்களது சுய சிந்தனையையும், சுய பகுத்தாராயும் திறனையும் வளர்க்கவும் உதவுகின்றது.

- **கட்புல செவிப்புல சாதனங்கள்**

கட்புல செவிப்புல சாதனங்களால் வீடியோப் படங்களையும், உரிய பாடநூல்களையும் மாணவர் பார்ப்பதால் கற்பதை இலகுவாக்குகின்றது. அத்துடன் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின விரிவுரையாளர்கள், குறிப்பிட்ட துறைகளின் நிபுணர்கள் ஆகியோரினால் நடாத்தப்படும் ஒலிப்பதிவு நாடாக்கள் சமா்ப்பனங்களை கேட்கும் வாய்ப்பையும் வழங்குகின்றது.

- **நாட்பாடசாலைகள்**

திறந்த பல்கலைக்கழகத்தின் தொலைக்கல்வி முறையில் அச்சிடப்பட்ட பாடநூல்கள், கட்புல, செவிப்புலச் சாதனங்கள் என்பன பிரதான கூறுகளாகும். இவைகளுக்கு மேலாக நாட்பாடசாலை ஒவ்வொரு கால வேளையிலும் பிரதேச கற்கை நிலையங்களிலும், கற்கை நிலையங்களிலும்இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வித் துறைசார்ந்தோராலும், வருகைதரும் விரிவுரையாளர்களினாலும் நடத்தப்படும். இந்த நாட்பாடசாலைகள் பிரதானமாக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை கலந்துரையாடலுக்கும் பகுத்தாராய்வதற்குமேயாகும்.

- **ஒப்படைகளும் பரீட்சைகளும்**

மாணவர்களின் செயற்றிறன் தொடர் மதிப்பீடு (CA) மூலமும்,பரீட்சைகளாலும் மதிப்பிடப்படும். குறித்த ஒரு கல்வியாண்டில் மாணவர் குறிக்கப்பட்ட ஒப்படைகளை சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவதுடன், அது திருத்தப்பட்டு தரமிட்டு விரிவுரையாளரின் குறிப்புரைகளுடன் மீண்டும் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். ஒப்படைகளின் வகையும், அமைப்பும் அதன் எண்ணிக்கையும் பொறுப்பாகவுள்ள கல்வி துறையினால் தீர்மானிக்கப்படும். இதுபாடநெறிகளுக்கு ஏற்றவாறு வேறுபட்டதாகஇருக்கும்.

இத்தொடர் மதிப்பீடானது, மூடிய பாடநூல் பரீட்சைகள்,திறந்த பாடநூல் பரீட்சைகள், வீட்டில் இருந்து எழுதும் ஒப்படை,திட்ட முன்மொழிவுகள் என்பவற்றின் மூலமாக நடைபெறும்.

மாணவர்களைச் சேர்த்ததன் பின்னர் அவர்களுக்கு வழங்கப்படும் வழிகாட்டி கைந்நூலை வாசித்து, தொடர் மதிப்பீடு, தொடர் கற்றலின் முக்கியத்துவத்தினை விளங்கிக்கொள்ளல் வேண்டும். தொடர் மதிப்பீட்டில் சித்தியடையாது, தகுதியைப் பெறாது இறுதிப் பரீட்சை எழுத மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஒவ்வொரு கல்வியாண்டின் இறுதியிலும், இறுதிப் பரீட்சை நடைபெறும்.

இறுதி தரம் அல்லது பெறப்படும் சித்தியானது ஒப்படை, இறுதிப் பரீட்சைப் புள்ளியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். மாணவர்கள் இறுதிப் பரீட்சைக்கான தகுதியினை அதாவது ஒப்படைகளின் சித்தியை அடையாத போது கற்கை நெறிக்குத் தம்மை மீண்டும் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்கள்.

மாணவர் தகுதியைப் பெற்றிருந்தும், இறுதிப் பரீட்சையைத் திறமையாகச் செய்யாதவிடத்து மீண்டும் இறுதிப் பரீட்சைசைக்குத் தோற்ற வேண்டும். அவர்கள் மீள்பயிலும் மாணவர்களாகப் பதிவு செய்தல்வேண்டும்.

- **பிரதேச சேவைகள்**

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் இலங்கை பூராகவும் பிராந்திய, கற்கை நிலையங்களின் வலைப்பிண்ணலைக் கொண்டுள்ளது. இந் நிலையங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான விரிவுரைகள், பாட நூல் பற்றிய கலந்துரையாடல்கள்,நூலக, கட்புல, செவிப்புல உதவிகள், பாடநூல் விநியோகம், பரீட்சைகளை நடாத்துதல்,ஆலோசனை வழங்கல் போன்றவற்றையும் வழங்குகின்றன.

*அட்டவணை 4ம், 5ம் பிரதேச,கற்கை நிலையங்களின் தகவல்களை வழங்குகின்றன.*

**அட்டவணை 4 : பிராந்திய நிலையங்கள்**

| இடம் | குறியீடு | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| கொழும்பு | WP10 | OURC, நாவல, நுகேகொட | 0112 853930 |
| கண்டி | CP20 | OURC,பொல்கொல்ல, கண்டி | 081 2494083/4<br>081 2494495/6 |
| மாத்தறை | SP30 | OURC, நூபே, மாத்தறை | 041 2222943 |
| யாழ்ப்பாணம் | NP40 | OURC, பிரவுன்ஸ்வீதி,கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 2223374 |
| அனுராதபுரம் | NC50 | OURC, ஜயந்தி மாவத்தை, (டிப்போ பகுதி), அனுராதபுரம் | 025 2222871 |
| மட்டக்களப்பு | EP60 | OURC, இல.23, புது வீதி, மட்டக்களப்பு | 065 2222264 |
| குருநாகல் | NW70 | OUSC, நீர் கொழும்புவீதி (நிஸங்க மாவத்தை சந்தி) மல்கடுவாவ,குருநாகல். | 037 2223473 |
| பதுளை | UP80 | OURC, இல.179, கெபிடிபொல வீதி,பதுளை. | 055 3012151<br>055 2228842 |
| இரத்னபுரி | SG90 | ஹெடல்லன, இரத்னபுரி | 045 2228660 |

**அட்டவணை 05 : கற்கை நிலையங்கள்**

| இடம் | குறியீடு | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| கம்பஹா | WP11 | OUSC, கம்பஹா வீதி, மிரிஸ்வத்த, முதுனாகொடை, கம்பஹா | 033 2234571/2 |
| களுத்துறை | WP12 | OUSC, இல. 66/2, நாகொட வீதி, களுத்துறை | 034 2223399 |
| ஹட்டன் | CP21 | OUSC, தொன்டமான் தொழிற்பயிற்சி நிலையம், ஹட்டன். | 051 2225139<br>051 2223492 |
| அம்பலாங்கொடை | SP31 | OUSC, 80/1, பொல்வத்தை வீதி,ஹல்வத்துர, அம்பலாங்கொடை | 091 2258585 |
| காலி | SP32 | OUSC, லவுதுவ, காலி | 091 2223784 |

| | | | |
|---|---|---|---|
| அம்பலாந்தோட்டை | SP33 | OUSC, ராஜசரனகம வீதி, லுனம தெற்கு, அம்பலாந்தோட்டை | 047 2220940<br>047 2225533 |
| வவுனியா | NP41 | OUSC, இல. 366, கண்டி வீதி,தெக்காவத்தை, வவுனியா. | 024 2222995 |
| கிளிநொச்சி | NP42 | OUTC, 155ம் கட்டை, கண்டி வீதி, கிளிநொச்சி. | 021 2283970 |
| முல்லைத்தீவு | NP43 | OUSC, ஆதிபராசக்தி அறிவியல் கல்லூரி, 04ம் வாட், இரனைப்பாலை, முல்லைத்தீவு | 071 3522367 |
| பொலன்நறுவை | NC51 | OUSC, 24ம் கட்டை, பென்டிவேவா, ஜயந்திபுர. | 027 2225776 |
| அம்பாறை | EP61 | OUSC, சாமபுர, இங்கினியாகலை வீதி, அம்பாறை | 063 2222052 |
| திருகோணமலை | EP62 | OUSC, விவேகானந்தா கல்லூரி, உவர்மலை, திருகோணமலை | 026 3264813 |
| புத்தளம் | NW71 | OUSC, 1/37 கொழும்பு வீதி,புத்தளம். | 032 2266822 |
| பண்டாரவளை | UP81 | OUSC, புனித தோமாஸ் வீதி, வேவத்தென்ன, பண்டாரவளை | 057 2222820 |
| மொனறாகலை | UP82 | OUSC, தொழில்நுட்பக் கல்லூரி சந்தி, சிறிகல, பொத்துவில் வீதி, மொனறாகலை | 055 2277395 |
| கேகாலை | SG91 | OUSC, குமாரதுங்க முனிதாச வீதி, கேகாலை | 035 2222501 |
| மன்னார் | NP44 | தலைமன்னார் வீதி, மன்னார். | 077 5625352 |

இலங்கைக திறந்த பல்கலைக்கழகத்தின் நூலக முறைமை பாரம்பரிய நூலகங்களை விடவும் வேறுபட்டது. நாடு பூராகவும் பரந்திருக்கும் மாணவர் தொகுதியின் தேவைகள் அது வழங்குகின்றது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நூலக முறைமை மாணவர்களுக்கு உசாத்துணை வசதிகளையும், வரையறுக்கப்பட்ட இரவல் வழங்கும் வசதிகளையும் வழங்குகின்றது. மாணவர்களுக்கு இரவல் வழங்கல் பொதுவாக ஒரு வாரத்திற்குரியதாகும். ஆயினும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் உசாத்துணை வசதிககளுக்கு வரையறை கிடையாது.

**கட்டணங்களும் ஏனைய செலவினங்களும்**

கட்டணங்கள் கேட்கப்படும் போது உரிய காலத்தில் செலுத்தப்படல் வேண்டும் என்பதே பொதுவான விதியாகும். பல்கலைக்கழகம் எவ்வித முன்னறிவித்தல் இன்றி கட்டணங்களையும், ஏனைய செலவீனங்களையும் மாற்றியமைக்கலாம். செலுத்தப்பட்ட கட்டணங்கள் மீளப் பெறக்கூடியதல்ல.

- ஒரு விண்ணப்பதாரி ஒரு கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்காக இலங்கை திறந்த பல்லைக்கழக்தில் இடமளிக்கும் போது, குறித்த தினத்தில் கற்கைக்குரிய கொடுப்பனவுக்கான கட்டணங்கள் அடங்கிய விபரப் பட்டியலைப் பெற்றுக்கொள்ளவார். குறித்த தினத்தில் கட்டணங்கள் செலுத்தத் தவறுமிடத்தில் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட இடம் இரத்துச் செய்யப்படும்.
- கட்டணங்கள் செலுத்தும் முறை கொடுப்பனவுக்காக விபரப்பட்டியலில் காட்டப்பட்டிருக்கும். எனினும், போதனைக்கான கட்டணம் இரு தவணைகளில் செலுத்தப்படலாம். முதலாவது தவணைக் கட்டணம் பதிவின் போது செலுத்தப்படல் வேண்டும்.
- குறித்த ஒரு வருடத்திற்கான போதனைக் கட்டணம் 10 சத வீதத்தினால் வருடாந்தம் அதிகரிக்கப்படும். அத்துடன் மாணவர் குறித்த பாடநெறியினை மீண்டும் பயில்வதாயின் போதனைக் கட்டணம் இரு மடங்காகச் செலுத்தப்படல் வேண்டும்.

**பதிவு செய்தல்**

- மாணவர்கள் தாம் விரும்பும் கற்கை நெறியினை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பயில்வதற்குக் குறித்த காலத்தில் கட்டணத்தைச் செலுத்தி பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.
- மாணவர்கள் பதிவு செய்யும் தினத்தன்று கட்டாயம் சமூகம் அளித்தல் வேண்டும். ஏனெனில், அன்றைய தினம் கற்கை நெறி தொடர்பான ஆற்றுப்படுத்தலும், கல்வி ஆலோசனையும் இடம்பெறும்.
- எனினும் மாணவர்கள் தாமாக வரமுடியாத நிலை ஏற்படுமிடத்து தமக்காக உரிமையுள்ள ஒருவரை பதிவு செய்யும் தினத்தன்று அனுப்பி வைக்கலாம்.
- பதிவு செய்தல் பிராந்திய நிலையங்களிலும் தெரிவு செய்யப்பட்ட கற்கை நிலையங்களிலும் நடைபெறும். இந்த நிலையங்களில் பதிவு செய்வதற்கான வசதி குறித்த நிலையத்தில் விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும்.
- அதி கூடுதலாக 2½ கணிப்பு விகிதத்தைக் கொண்ட ஆகக் கூடிய இரு கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்கே மாணவர் பதிவு செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்.

- அதி கூடிய 2 கணிப்பு விகிதத்தைக் கொண்ட இரு முறையிலான கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்கும், ஆகக் கூடிய கணிப்பு விகிதத்தைக் கொண்ட தொடர் கல்விக் கற்கை நெறிக்கும் மாணவர் பதிவு செய்யப்படலாம்.
- மாணவர்கள் 2 கணிப்பு விகித்தைக் இரு கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒரே சமயத்தில் பதிவு செய்யுமிடத்து கல்விச் செயற்பாடும் பரீட்சையும் சில சமயங்களில் ஒன்றுடன் ஒன்று முரண்படலாம். இதனால் ஏற்படும் வசதியீனம் அல்லது பிரதிகூலங்களுக்கு பல்கலைக்கழகம் எவ்வித பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளாது.
- எந்தவொரு கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் மாணவர் பதிப்புரிமையினை இலகுவாகப் பெற முடியாது அவ்வாறானவர்களுக்கு½ கணிப்பு விகிதமே வழங்கப்படும்.
- பதிவு செய்யும் இறுதித்தினத்தில் இருந்து 7 மாதங்களுக்கே கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாணவர் பதிப்புரிமை வழங்கப்படும். அதன் பின்னர் இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற மாணவர் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**குறிப்பு :**

இக்கற்றை நெறி தொடர்பான விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் 2018ம் ஆண்டு ஜனவரி மாற்றத்திற்குட்படுமென்பதை கவனத்திற் கொள்ளவும். ஆகவே மாணவர்கள் தேவையற்ற சிக்கல்களை தவிர்க்கும் பொருட்டு இந்த ஆண்டிலேயே கற்கை நெறியினை முடித்து சான்றிதழை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**கற்கை நெறிகளில் மாற்றம் செய்தல்**

மாணவர் ஒருவர் கற்கை நிகழ்ச்சித்திட்டத்திற்கு பதிவு செய்த பின் கற்கை நெறியில் மாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படுவர். ஆயினும் பதிவு செய்த பின் மூன்று மாதகாலப் பகுதியினுள்ளேயே இம்மாற்றத்தினைச் செய்யலாம்.

**தொடர்புத் தகவல்கள்**

**தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் குழாம்:**

திரு. ஜனக ஹீன்கெந்த
பிரதான இணைப்பாளர்
தொலைபேசி – 0112 881024/ 0112 881255

கலாநிதி. சுனீதா விஜயகுமாரன்
விரிவுரையாளர்,
கல்விசார் இணைப்பாளர் – தமிழ்
தொலைபேசி - 0112 881024/ 0112 881255

செல்வி. ஹரிணி பெரேரா
கல்விசார் இணைப்பாளர்
தொலைபேசி - 0112 881024/ 0112 881255

செல்வி. நிலக்ஷி விக்ரமசூரிய
நிழச்சித்திட்ட உதவியாளர். சிங்களம் /ஆங்கிலம்
தொலைபேசி - 0112 881024/ 0112 881255

திரு. எம்.எம்.ஏ. லத்தீப்
இணைப்பாளர் – தமிழ்
தொலைபேசி - 0112 881024/ 0112 881255

**தபால் முகவரி:**

பொதுசன தொடர்புகள் மற்றும் தகவல்கள் பிரிவு,
த. பெ. இல: 21,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல,
நுகேகொட
தொலைபேசி – 0112881327/011881255

## பின்னிணைப்பு

ESBM 2018 நிகழ்ச்சித்திட்டத்திற்கான விண்ணப்பம் இணையத்தில் பெறக்கூடியதாக காணப்படும். இணையத்தினுடாக விண்ணப்பிப்பதற்கு மாணவர்கள் பின்வரும் படிமுறைகளை பயன்படுத்த வேண்டும்.

படிமுறை 1

[www.ou.ac.lk](http://www.ou.ac.lk) எனும் இணைப்பினுள் நுழைக.

படிமுறை 2

இடது பக்கத்தில் காணப்படும் "Online Application" எனும் பதத்தை Click செய்க.Online விண்ணப்ப செயன்முறையில் பின்வரும் windowவினை நீங்கள் காணக்கூடியதாக இருக்கும்.



படிமுறை 3

“Create New Account” என்பதனை Clickசெய்க. பின்வரும் windowவினை நீங்கள் காணக்கூடியதாக இருக்கும்.

தொடர்புடைய தகவல்களை நிரப்பி புதியகணக்கொன்றை ஆரம்பிக்குக.




படிமுறை 4

படிமுறை 3னை நிறைவு செய்த பின் பின்வரும் windowவினை நீங்கள் காணக்கூடியதாக இருக்கும்.



படிமுறை 5

"Add New Application" என்பதனை Click செய்க. பின்வரும் windowவினை நீங்கள் காணக்கூடியதாக இருக்கும்.

தொடர்புடைய தகவல்களை நிரப்புக.

*குறிப்பு: Programme* - Certificate in Entrepreneurship and Small Business Management*




படிமுறை 6

படிமுறை 5னை நிறைவு செய்த பின்,"Apply and Pay" என்பதனை Click செய்க. பின்வரும் windowவினை நீங்கள் காணக்கூடியதாக இருக்கும்.



படிமுறை 7
விருப்பமான கட்டண முறையை தேர்வு செய்வதுடன் வலைபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றுக.

படிமுறை 8
கட்டண செயல்முறையின் இறுதியில்,"View" என்பதனை click செய்வதன் மூலம் அமைப்பினால் (System) உருவாக்கப்பட்ட தகவல் தாளினை (Information sheet) download செய்ய முடியும்.

*குறிப்பு: நீங்கள் online registration தொடர்பாக ஏதேனும் சிரமத்திற்குட்படுவீரானால், அருகாமையில் காணப்படும் திறந்த பல்கலைக்கழக பிராந்திய அல்லது கற்கை நிலையத்தில் உள்ள ஒருங்கிணைப்பாளருடன் தொடர்பு கொண்டு உதவி கோருமாறு தயவுகூர்ந்து கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.*

### மேலதிக தகவல்கள்

இக் கற்கை நெறிக்குப் பதிவு செய்தல் தொடர்பான மேலதிக தகவல்களை பின்வருமிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

Public Relations and Information Division,
P.O. Box No.21,
The Open University of Sri Lanka,
Nawala,
Nugegoda.
Telephone Nos: 011- 2881327
011- 2881256
Website ***www.ou.ac.lk***